அ.வ.எண். **201/2023** வா.சா.**1 -** சங்கீதா **12.09.2024**

சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, **1** முதல் **3** பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்த மருந்துபில்கள் எனக்கு எப்படி கிடைத்தது என்றால் ஆசைத்தம்பி வைத்திருந்தார். என் மாமியார் வீடு கட்டும்போது நான் ஊருக்கு வரும்போது அங்கு வந்து செல்வேன். என் அப்பா, என் மாமியார் உடனிருந்து வீடு கட்டுவதற்கு உதவிகள் செய்து வந்தார். அவரால் முடிந்த வேலைகளையும், முடிந்த பண உதவிகளையும் செய்து வந்தார். வீடு கட்டி முடிக்கும் வரை என் அப்பா நிரந்தரமாக அங்கு குடியிருக்கவில்லை. அவ்வப்போது வந்து செல்வார். என் அப்பா என் மாமியார் வீட்டிற்கு வந்து செல்வார் என்றும், அவரால் முடிந்த உதவிகளை செய்து வந்தார் என்றும் நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. என் மாமியார் செண்பகவள்ளி மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டபோது, எனது சார்பில் ஆசைத்தம்பி கவனித்துக்கொண்டார். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவபில்கள் மற்றும் மருத்துவ குறிப்புகளை பின்னிட்டு, வழக்கிற்காக வாங்கி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் எந்தக்காலத்திலும் என் மாமியாரை கவனித்ததில்லை என்றால் சரியல்ல. என் மாமியார் எழுதி வைத்த உயிலை ஆட்சேபித்து நான் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல.

**4** ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

ஒம்/-ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்

மறு விசாரணை

இல்லை.

அ.வ.எண். **201/2023** வா.சா.**2 -** பொன்னுசாமி **12.09.2024**

சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, **1** முதல் **3** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

செண்பகவள்ளி மற்றும் அவரது கணவர் வெங்கடாசலம் ஆகியோர் எந்தக்காலத்திலும் என்னுடன் சுமூக உறவில் இருந்ததில்லை என்றால் சரியல்ல. என் மகள் காதல்திருமணம் செய்துக்கொண்டார். அதனால் இருகுடும்பத்திற்கும் மனவருத்தம் ஏற்பட்டு, என் மகளும், மருமகனும் தனியாக குடியிருந்து வந்தனர் என்றால் சரியல்ல. என் மருமகனின் பெற்றோருடன் குடியிருந்து வந்தனர். என் மகள் திருமணம் முடிந்து, ஓரிரு மாதங்களில் திருமணம் பற்றிய விவரம் வெளியே தெரியவந்தது. திருமணத்திற்கு பிறகு, காவல்நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. செண்பகவள்ளியின் கணவர் வெங்கடாசலத்திற்கு உடல் உபாதைகள் ஏதேனும் இருந்ததா என்றால் இருந்தது. அவரது உடல்உபாதைகளுக்காக அவர் எங்கு சிகிச்சை பெற்றார் என்றால் அவருக்கு இரத்தக்கொதிப்பு இருந்தது. எங்கு சிகிச்சை எடுத்தார் என்று எனக்கு தெரியாது. வழக்குச்சொத்து தெற்கு பார்த்த வீடு. அதன் முன்வாசல் கிழக்கு பார்த்துள்ளது. அந்த வீட்டில் எத்தனை அறைகள் உள்ளன என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. அந்த வீட்டின் மாடிப்படிக்கட்டு எந்தபக்கம் உள்ளது என்று எனக்கு ஞாபகமில்லை. அந்த வீட்டில் நிலத்தொட்டி உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. நான் எந்தக்காலத்திலும் செண்பகவள்ளி வீடு கட்டுவதற்கு நான் உதவி செய்தது கிடையாது என்றும், நான் செண்பகவள்ளியின் வீட்டிற்கு சென்றதே இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. வெங்கடாசலம் எப்படி இறந்தார் என்றால் இரத்தக்கொதிப்பு காரணமாக இறந்தார். அவர் வீட்டில் இறந்தாரா, மருத்துவமனையில் வைத்து இறந்தாரா என்று எனக்கு தெரியாது. வெங்கடாசலம் இறப்பதற்கு முன்பு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்தாரா என்றால் எனக்கு அதுபற்றி

தெரியாது. எனது மகளின் இரண்டாவது திருமணத்திற்கு செண்பகவள்ளியும், அவரது கணவர் வெங்கடாசலமும் வந்திருந்தனர் என நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. எனது மகளின் இரண்டாவது திருமணம் கும்பகோணம் அருகில் உள்ள ஒரு கோவிலில் நடந்தது. அந்த கோவிலுக்கு செண்பகவள்ளியும், அவரது கணவர் வெங்கடாசலமும் வந்திருந்தனர். அந்த திருமணத்திற்கு பிறகு, வரவேற்பு நிகழ்ச்சி சேலத்தில் வைத்து நடந்தது. செண்பகவள்ளியும், அவரது கணவர் வெங்கடாசலமும் சேலத்தில் நடந்த திருமணவரவேற்புக்கு வரவில்லை என்றால் சரியல்ல. செண்பகவள்ளி மற்றும் அவரது கணவரின் கட்டாயத்தின்பேரில்தான் என் மகளுக்கு இரண்டாவது திருமணம் நடந்தது என நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. செண்பகவள்ளியின் கணவர் இறப்பிற்கு நான் வந்திருந்தேன். அவர் உடல் அவரது சொந்தஊரான சீத்தப்பட்டியில் அடக்கம் செய்யப்பட்டது. அவரது சொந்த ஊருக்கு சென்றேன். அவரதுசொந்த ஊர் எந்தப்பக்கம் உள்ளது என்றால் நான் காரில் சென்றேன். அவரது ஊர் கரூர் பஸ்டாண்டிலிருந்து எந்தபக்கம் உள்ளது என்றால் குஜிலியம்பாறை செல்லும் வழியில் உள்ளது. குஜிலியம்பாறையிலிருந்து எந்த திசையில் சீத்தப்பட்டி உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் செண்பகவள்ளியின் கணவர் இறப்பிற்கு சென்றேன் என நான் சொல்வது முற்றிலும் பொய் என்றால் சரியல்ல. செண்பகவள்ளியும், அவரது கணவரும் வாதிகளுடன் நல்லுறவில் இருந்தனர் என நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. செண்பகவள்ளியும், அவரது கணவரும் சேலத்தில் உள்ள எனது வீட்டிற்கு வந்து தங்குவார்கள் என்றும், நான் செண்பகவள்ளியின் வீட்டிற்கு வந்து தங்குவேன் என்றும் கூறுவது பொய் என்றால் சரியல்ல. நான் என் ......

மகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**4** ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

மறு விசாரணை

இல்லை.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.